www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019

பன்னிரெண்டாம் வகுப்பு Reg.No.

நேரம்: 1.30 மணி **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 45

## பகுதி - அ

**I. பலவுள் தெரிக:** 7 x 1 = 7

1. ஆர்ப்பரிக்கும் கடல்
அதன் அடித்தளம்
மௌனம்; மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது
அ) இரைச்சல் ஆ) குறைகுடம் கூத்தாடும்
இ) நிறைகுடம் நீர்த்தழும்பல் இல்
ஈ) புற அசைவுகள் அகத்திணை அசைக்க இயலாது

2. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல்
மன்னற்குக் காட்டல் ...
- தொடர்களில் வெளிப்படும் செய்திகள்
1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்
2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்
அ) 1 சரி, 2 தவறு ஆ) 1 தவறு, 2 சரி இ) 1 தவறு, 2 தவறு ஈ) 1 சரி, 2 சரி

3. 'ஐம்பெருங்காப்பியம்' என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
அ) சிவஞான முனிவர் அ) மயிலை நாதர் இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்

4. பெருங்காப்பியத்தில் அமைந்திருக்க வேண்டிய உறுதிப் பொருள்கள்
அ) அறம், பொருள், இன்பம் ஆ) அறம், பொருள்
இ) அறம், இன்பம் ஈ) அறம், பொருள், இன்பம், வீடு

5. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர் கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

6. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் ... இத்தொடரில் பெயரெச்சம்
அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

7. யானை புக்க புலம் போல - இவ்வுவமைக்கு பொருத்தமான தொடர்
அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
ஈ) தனக்குப் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

**II. எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளில் விடையளி:** 5 x 2 = 10

8. எண் வகை மெய்ப்பாடுகள் யாவை?
9. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.
10. புல் - புள் - பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.
11. கலைச்சொல்லாக்கம் தருக:
1) ARTIST 2) ANIMATION
12. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
13. செவியறிவுறூஉ துறையை விளக்குக.
14. தொன்மம் - விளக்கம் தருக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



**III. எவையேனும் மூன்றனுக்கு குறுகிய வடிவில் விடையளி:** 3 x 4 = 12

15. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக.

16. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து ஏற்புடைய நான்கு நயங்களைச் சான்றுடன் விளக்குக.

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
 அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
 பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
 சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
 எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

- பாரதிதாசன்

17. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

18. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

19. 'யானை புக்க புலம்போலத் தானும் உண்ணாள் உலகமும் கெடுமே' - உவமையையும் பொருளையும் பொருத்தி எழுதுக.

**IV. அடிபிறழாமல் எழுதுக:** 1 x 4 = 4

20. 'குழல் வழி நின்றது ...' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

**V. எவையேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி:** 1 x 6 = 6

21. திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

*(அல்லது)*

22. எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

**VI. எவையேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி:** 1 x 6 = 6

23. மகா நடிகரான சிவாஜி கணேசனைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

*(அல்லது)*

24. சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது - விளக்குக.

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned by CamScanner